முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**இடைநிலைப் பரீட்சை – 2011 ஜுலை**

## (54) கணக்கியலும் கட்டுப்பாட்டு முறைகளும்
Accounting & Control Systems

30-07-2011
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 10
வினாக்களின் எண்ணிக்கை : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

*(1) இவ்வினாத்தாள் **A, B, C எனும் மூன்று (03)** பகுதிகளைக் கொண்டது.*

*(2) **கீழே குறிப்பிட்டவாறு ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.***
- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்***
- ***பகுதி B யிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும்***
- ***பகுதி C யிலுள்ள ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கும்***

*(3) **விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

*(4) சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்குக. எடுகோள்கள் ஏதுமிருப்பின் அவற்றினைத் தெளிவாகக் கூறுக.*

*(5) கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*(6) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி - A
பல்தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
30 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றின் கீழே தரப்பட்டுள்ள விடை இலக்கங்கள் (1), (2), (3), (4) இலிருந்து மிகவும் திருத்தமான விடையினை தேர்வு செய்து உமது விடைப் புத்தகத்தில் ஒவ்வொரு வினாவிற்கும் ஒதுக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்களை ஒழுங்கு வரிசையாக எழுதி அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே தேர்வு செய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.

(A) தனி உரிமையாளரின் வியாபாரம் ஒன்று தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

| | **ரூ.'000** |
|---|---|
| 2010 டிசம்பர் 31 ஆம் திகதி உரிமையாளர் கணக்கின் (நடைமுறை மற்றும் மூலதன) செலவு மீதி | 313 |
| 2010 ஜனவரி 1 ஆம் திகதி உரிமையாளர் கணக்கின் (நடைமுறை மற்றும் மூலதன) செலவு மீதி | 265 |
| ஆண்டின்போது உரிமையாளரினால் பொருள் எடுப்பனவுகள் (பட்டியலிடு விலையில்) | 12 |
| ஆண்டின்போது உரிமையாளரினால் காசு எடுப்பனவு | 15 |
| ஆண்டின்போது உட்படுத்திய மேலதிக மூலதனம் | 5 |

பொருட்கள் கிரயத்தில் 20% இலாபம் வைத்து விலைப்பட்டியல் இடப்பட்டும், ஆண்டின் போது உரிமையாளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகளை தாக்கத்திற்கு உள்ளாக்கும் வேறு ஊடுசெயல்கள் ஏற்படாதும் இருப்பின், இந்தத் தனியுரிமை வியாபாரத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான இலாபம் எவ்வளவு?

(1) ரூ.70,000 (2) ரூ.68,000 (3) ரூ.28,000 (4) ரூ.26,000

(B) கீழே தரப்பட்டவற்றுள் பரீட்சை மீதியினைத் தயாரிப்பதன் மூலம் கண்டுபிடிக்கக்கூடிய வழு (error) எது?

(1) எந்தப் பதிவும் மேற்கொள்ளப்படாத ஊடுசெயல் ஒன்று

(2) முதன்மை ஏட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்ட ஊடுசெயல் ஒன்று

(3) ஊடுசெயல் ஒன்றிற்கான செலவுப் பதிவொன்று வரவுப் பக்கத்திலும் அதே பெறுமதியான வேறொரு ஊடுசெயலில் வரவுப் பதிவொன்று செலவுப் பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டிருத்தல்

(4) ஊடுசெயல் ஒன்று ஒரு கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அது அதே கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டிருத்தல்

(C) கம்பனி ஒன்று தொடர்பாக 2011 மார்ச் 31 ஆம் திகதியில் கீழ்வரும் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| வங்கி மேலதிகப் பற்று | 520 |
| வியாபார வருமதிகள் | 980 |
| தொக்குகள் - மூலப்பொருட்கள் | 125 |
| தொக்குகள் - புத்துருவாகும் வேலை | 75 |
| தொக்குகள் - முற்றுப் பெற்ற பொருட்கள் | 200 |
| வியாபார சென்மதிகள் | 825 |
| அட்டுறு செலவுகள் | 25 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் அந்தத் திகதியில் கம்பனியின் விரைவுச் சொத்து விகிதம் (quick asset ratio):

(1) 1.007 : 1 (2) 2.235 : 1 (3) 1.765 : 1 (4) 0.715 : 1

(D) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள், சில்லறைக் கடை ஒன்றின் பன்னிரெண்டு (12) மாத காலம் தொடர்புபட்டவையாகும். :

| | ரூ.'000 |
|---|---|
| ஆரம்பத் தொக்குகள் | 3,600 |
| இறுதி தொக்குகள் | 4,800 |
| கோள்வனவுகள் | 8,400 |

மேலே தரப்பட்ட தகவல்களை உபயோகித்து இந்தத் கடை பெற்ற மொத்த இலாபம் ரூ.7,800,000 என கணித்து அறிந்துள்ளது. எனினும் இறுதித் தொக்குகள் ரூ.200,000 இனால் மிகைப்படுத்தியும் ஆரம்பத் தொக்குகள் ரூ.400,000 இனால் குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தமை பின்னர் தெரிய வந்தது.
இந்தச் சில்லறை வியாபாரத்தின் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மொத்த இலாப விகிதம் எதுவாக இருத்தல் வேண்டும்?

(1) 48%. (2) 52%. (3) 53.3%. (4) 50%.

(E) **மாகி என்டர்பிரைஸின்** வங்கி ஊடுசெயல்கள் தொடர்புபட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| வங்கிக் கூற்றின்படி மேலதிகப் பற்று மீதி | 39,200 |
| காசேட்டின் வங்கி நிரலில் தவறான வரவுப் பதிவு | 1,200 |
| வைப்பில் இடப்பட்ட ஆனால் இன்னும் தேறாத காசோலைகள் | 75,000 |
| வழங்கப்பட்டு இன்னும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 225,000 |

மேற்படி தரவுகளின்படி காசேட்டின் வங்கி நிரலின் சரியான வங்கி மீதி என்ன?

(1) ரூ.189,200 (செலவு) (2) ரூ.110,800 (வரவு)

(3) ரூ.109,600 (செலவு) (4) மேற்கூறிய எவையுமன்று.

(F) "ஒரு குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலத்தில் இறுக்கப்பட்ட செலவினம், அந்த செலவினத்திற்கான கொடுப்பவினை மேற்கொண்ட காலத்தினை கவனத்திற் கொள்ளாது, அது இறுக்கப்பட்ட காலத்தின் போதே கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்."

இதனை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டு எடுகோள்:

(1) வரலாற்றுக் கிரயம் (2) புத்திசாதுரியக் கோட்பாடு

(3) அட்டுறு அடிப்படை (4) இவை எவையுமல்ல.

(G) கம்பனியொன்றின் நிதி நிலைமையினை அளவிடுதலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட குழுமத்தினை கீழ்வருவனவற்றிலிருந்து தேர்வு செய்க.

(1) வருமானம், செலவுகள் மற்றும் காசுப் பாய்வுகள்

(2) சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மை

(3) வருமானம், செலவுகள், நிலையான சொத்துக்கள், நடைமுறைப் பரிப்புக்கள்

(4) நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பரிப்புக்களும்

(H) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் உள்நாட்டுச் சந்தைக்கு பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்றின் 2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டு தொடர்பானவையாகும்.

| | **ரூ.'000** |
|---|---|
| நிதிக்கூற்றுக்களின்படி 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதி | 425 |
| கடன் மற்றும் காசு விற்பனைகள் ( 12% VAT உள்ளடங்கலாக) | 31,360 |
| பொருட்களின் உள்நாட்டு கொள்வனவுகள் ( 12% VAT உள்ளடங்கலாக) | 12,544 |
| ஏனைய சேவைகளின் கொள்வனவு ( 12% VAT உள்ளடங்கலாக) | 3,136 |
| பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் (வரி விலைப்பட்டியல்கள் கிடைக்கப் பெறாதவை) | 2,500 |

மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ள காலத்தில் வருமான வரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிகர VAT (பெறுமதிசேர் வரி) பரிப்பு:

(1) ரூ.2,105,000 (2) ரூ.1,255,000

(3) ரூ.1,680,000 (4) ரூ.2,306,600

(I) கடன் பெறுநர்களிடமிருந்து பணம் பெறப்படும்போது உரிமத்தின் தொழிற்படு மூலதனம்:

(1) அதிகரிக்கும்

(2) மாற்றமடையாது

(3) குறைவடையும்

(4) விடையளிப்பதற்கு தகவல்கள் போதுமானவை அல்ல.

(J) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆண்டின்போது நுகரப்பட்ட /விற்பனை செய்யப்பட்ட தொக்குகள் விற்பனைக் கிரயமாக (செலவொன்றாக) ஏற்பிசைவு செய்யப்படும் அதேவேளை எஞ்சியவை ஆண்டின் இறுதியில் தொக்குகளாகக் (சொத்தொன்றாக) கருதப்படுகின்றன.

மேற்படி கையாள்கையின் அடிப்படையாக அமைந்த கணக்கியற் கோட்பாடு:

(1) பொருத்தம் காணல் (Matching) (2) தொடர்ந்தியங்கும் தாபன(Going Concern)

(3) அட்டுறு (Accrual) (4) வரலாற்றுக் கிரய (Historical cost)

(K) கம்பனியொன்றின் அகக் கணக்காய்வாளரின் நோக்கெல்லை தீர்மானிக்கப்படுவது:

(1) புறக் கணக்காய்வாளரினால் (2) பணிப்பாளர் சபையினால்

(3) பிரதான நிதி அலுவலரினால் (CFO) (4) அகக் கணக்காய்வாளரினாலேயே

(L) கணக்காய்வு வாடிக்கையாளர் ஒருவரின் வங்கி மீதியினை அறுதியீடு செய்வதில் கீழே தரப்பட்டவற்றுள் எந்த முறைகள் **உபயோகிக்கப்படுவதில்லை**?

(1) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினை செவ்வை பார்த்தல்

(2) காசேட்டின் வங்கி நிரலை மீண்டும் கூட்டுதல்

(3) வங்கி மீதியனை பௌதிக அறுதியீடு செய்தல் (Physical verification)

(4) வங்கியிலிருந்து உறுதிப்படுத்தற் கடிதத்தினைக் கோருதல்

(M) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றின் நோக்கமாக **அமையாதது**:

(1) வழுக்கள் மற்றும் மோசடிகளைக் கண்டுபிடித்தலும் தடை செய்தலும்

(2) சொத்துக்களைப் பாதுகாத்தல்

(3) தரக் கட்டுப்பாடுகள்

(4) கணக்கியற் தரவுகளின் செம்மையினை உறுதி செய்தல்

(N) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் அகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றின் கூறொன்றாக **அமையாதது** எது?

(1) கட்டுப்பாட்டுச் சூழல் (Control environment)

(2) இடர் மதிப்பீடு (Risk Assessment)

(3) கண்காணித்தல் (Monitoring)

(4) சட்ட நியதிக் கணக்காய்வு (Statutory Audit)

(O) பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் சட்ட நியதிக் கணக்காய்வாளர் எவர் தொடர்பாக சுயாதீனமுடையவராக இருத்தல் வேண்டும்?

(1) கம்பனியின் முகாமை

(2) கம்பனியின் பங்குதாரர்கள்

(3) கம்பனியின் தலையீட்டினைக் கொண்டுள்ள பிற தரப்பினர்

(4) மேலே கூறப்பட்டுள்ள மூன்று தரப்பினரும்

(ஒவ்வொன்றும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 30 புள்ளிகள்)

## பகுதி - B

கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய வினாக்கள்
இந்தப் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும் விடை தருக.
50 புள்ளிகள்

**02.** (A) SLAS 5 – தொக்குகள் தொடர்பாக கீழ்வரும் பதங்களை பொருள் வரையறை செய்க.

(a) தொக்குகள்

(b) நிகர தேறுகைப் பெறுமதி (Net Realizable Value)

(c) சீர் மதிப்பு (Fair Value) (03 புள்ளிகள்)

(B) கீழே தரப்பட்டுள்ள பரீட்சை மீதி **வ/வு றெயின்போ கம்பனியின்** ஏடுகளில் இருந்து 2011 மார்ச் 31 ஆம் திகதியில் பிரித்தறியப்பட்டவையாகும்.

| | வரவு ரூ.'000 | செலவு ரூ.'000 |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் - 2 மில்லியன் சாதாரண பங்குகள் | | 40,000 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் (1 மில்லியன் பங்குகள்) | | 20,000 |
| 12% தனிச்சங்கள் (வட்டி, அரையாண்டுக்கு ஒரு தடைவ செப்டம்பர் 30, மார்ச் 31 ஆம் திகதிகளில் செலுத்தப்படும்) | | 15,000 |
| கைக்கொள் இலாபம் 2010 ஏப்ரல் 1 இல் | | 17,500 |
| பொது ஒதுக்கம் 2010 ஏப்ரல் 1 இல் | | 10,100 |
| முதலீட்டு வருமானம் | | 1,500 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்,** கிரயத்தில் (2011 மார்ச் 31 இல்: | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி ரூ.30 மில்லியன்) | 96,000 | |
| அலுவலக உபகரணம் | 16,000 | |
| மோட்டார் வாகனம் | 40,000 | |
| தளபாட, இணைப்புக்கள் | 5,000 | |
| **தேய்மான ஏற்பாடு** 2010 ஏப்ரல் 1 ஆம் திகதி : | | |
| கட்டடங்கள் | | 31,000 |
| அலுவலக உபகரணம் | | 16,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 19,600 |
| தளபாட இணைப்புக்கள் | | 2,150 |
| தொக்குகள் | 22,300 | |
| வருமதிக் கணக்குகள் / சென்மதிக் கணக்குகள் | 16,750 | 14,150 |
| வங்கி மீதி - கணக்கு இல. 01 | 19,300 | |
| வங்கி மீதி - கணக்கு இல. 02 | | 3,000 |
| காசுக் கையிருப்பு | 2,200 | |
| முதலீடுகள் - கம்பனிப் பங்குகளில் | 14,910 | |
| பெ.சே.வரி (VAT) கட்டுப்பாட்டுக் கணக்கு | | 10,500 |
| உரிமைப் பங்கு வழங்கலில் பெற்ற பணம் | | 5,000 |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2010 ஏப்ரல் 1 இல் | | 750 |
| முற்கொடுப்பனவுகளும் அட்டுறு செலவுகளும் - 2010 ஏப்ரல் 1 இல் | 140 | 1,320 |
| ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட முன்னுரிமைப் பங்கிலாபம் | 1,400 | |
| நிருவாக, தாபனச் செலவுகள் | 21,770 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 10,300 | |
| விளம்பரம் | 8,500 | |
| வங்கிக் கட்டணமும் மேலதிகப் பற்று வட்டியும் | 1,100 | |
| செலுத்தப்பட்ட தனிச்ச வட்டி | 900 | |
| மொத்த இலாபம் 2011.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | 69,000 |
| | **276,570** | **276,570** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(1) தேய்மானம் நேர்கோட்டு முறையில் கீழ்வரும் விகிதங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| கட்டடம் | - | ஆண்டுக்கு 5% |
| அலுவலக உபகரணம் | - | ஆண்டுக்கு 10% |
| மோட்டார் வாகனம் | - | ஆண்டுக்கு 25% |
| துளபாட இணைப்புக்கள் | - | ஆண்டுக்கு 25% |

(2) ஆண்டின்போது கம்பனிக்குச் சொந்தமான நிலத்தில் புதிய காட்சியறை ஒன்று ரூ.8 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டது. நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு காட்சியறை 2011 ஜனவரி 1 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மொத்த நிர்மாணக் கிரயம் காணியும் கட்டடமும் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது.

(3) 2008 ஏப்ரல் 1 ஆம் திகதி ரூ.2.8 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டு விநியோகத் தேவைகளுக்காக உபயோகிக்கப்பட்டு வந்து வான் ஒன்று 2010 ஜுன் 30 ஆம் திகதி ரூ.1.8 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த விற்பனையினால் பெறப்பட்ட பணம் விற்பனைக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக கம்பனி ஏடுகளில் வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(4) வியாபாரக் கணக்கினைத் தயாரித்த பின்னர் கீழ்வரும் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை சீர்செய்யப்படவில்லை.

(i) வரி விலைப்பட்டியலுடன் சேர்ந்த கடன் கொள்வனவு ஒன்று ஏடுகளில் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டிருந்தது. பெ.சே.வரி (VAT) 12% உள்ளடங்கலாக அந்த விலைப் பட்டியலின் பெறுமதி ரூ.1,008,000 ஆகும்.

(ii) ரூ.1.2 மில்லியன் கிரயமான பொருட்கள் ஆண்டின்போது வெளியாருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. இது தொடர்பில் எந்தப் பதிவுகளும் மேகொள்ளப்படவில்லை.

(iii) 2011 மார்ச் மாதத்திற்காக வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டியாக ரூ.115,000 இனையும் வங்கிக் கணக்கு இல. 2 இல் வங்கிக் கட்டணமாக ரூ.5,000 இனையும் வங்கி அறவீடு செய்திருந்த போதிலும் அவை கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

(iv) வெளிநாட்டு வியாபாரச் செயலமர்வுச் (trade fair) செலவு ரூ.1.9 மில்லியன் சந்தைப்படுத்தல் தொடர்பாக இறுக்கப்பட்டதுடன், இது தவறுதலாக நிர்வாகச் செலவு களில் உட்படுத்தப் பட்டுள்ளது.

(5) 2010 ஏப்ரல் 1 மற்றும் 2011 மார்ச் 31 ஆகிய திகதிகளில் அட்டுறு செலவுகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு:

*ரூ. '000*

| | **முற்கொடுப்பனவுகள்** | | **அட்டுறுக்கள்** | |
|---|---|---|---|---|
| | **01.04.2010** | **31.03.2011** | **01.04.2010** | **31.03.2011** |
| மின்கட்டணம் | 110 | - | - | 180 |
| விளம்பரம் | - | - | - | 175 |
| தொலைபேசி | - | 70 | 120 | - |
| நீர் கட்டணம் | 30 | 50 | - | - |
| சம்பளமும் கூலியும் | - | - | 1,200 | 1,300 |

(6) வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து வருமதியாகவுள்ள ரூ.500,000 இனைப் பதிவழிப்புச் செய்வதுடன் ஐயுறவுக் கடன் ஏற்பாட்டினை நிலுவையிலுள்ள வருமதிக் கணக்கு மீதியின் 4% ஆக செம்மை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(7) தனிச்சங்கள் 2009 ஏப்ரல் 1 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது.

(8) 2011 மார்ச் 31 இல் நடைபெற்ற பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் அதே திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபையானது கீழ்வரும் தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் தேவையான முறையான பதிவுகள் எதுவும் இன்னும் மேற்கொள்ளப் படவில்லை.

(i) 2011 மார்ச் 31 ஆம் திகதியில் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு இரு பங்குகளுக்கும் ஒரு பங்கு என்ற விகிதத்தில் சகல சாதாரண பங்குதாரர்களுக்கும் பங்கொன்று ரூ.5 விலையில் வழங்கப்படும் உரிமையாண்மைப் பங்குகளை கணக்கிற் கொள்வதற்கு இந்தப் பணத்தினை அவர்கள் ஏற்கனவே செலுத்தியுள்ளனர்.

(ii) 2011 மார்ச் 31 ஆம் திகதி கைக்கொள் வருவாயிலிருந்து ரூ.15 மில்லியனை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுவதற்கு

(iii) வருடத்திற்கான எஞ்சிய முன்னுரிமைப்பங்கு இலாபமான பங்கொன்றிற்கு ரூ.1.60 இனை செலுத்துவதற்கு. எனினும் இந்தத் தீர்ப்பனவுக் காசோலைகள் 2011.04.01 ஆம் திகதியிடப்பட்டு அந்தத் திகதியிலேயே வழங்கப்பட்டன.

**முகாமையின் உபயோகத்திற்காக வ/வ றெயின்போ கம்பனிக்காக கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக.**

(a) 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று (14 புள்ளிகள்)

(b) 2011 மார்ச் 31 இல் ஐந்தொகை (11 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

**03.** **அமல், பிமல் மற்றும் சியால்** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் தம்மிடையே பகிர்ந்து கொள்ளும் **ABC** டிரேடர்ஸ் இன் பங்காளர்கள் ஆவர். 2010 டிசம்பர் 31 ஆம் திகதி சியால் பங்குடைமையிலிருந்து ஓய்வு பெற்றதுடன் அமலும் பிமலும் இலாப நட்டங்களை முறையே 3 : 2 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் பங்குடைமை வியாபாரத்தினை அதே பெயரின் கீழ் தொடர்ந்தனர்.

பங்குடைமையின் ஏனைய உடன்பாடுகள் வருமாறு:

(1) பங்காளர் கீழ்வரும் மாதாந்தச் சம்பளத்திற்கு உரித்துடையவராவர்.

**அமல்** : ரூ.12,000

**பிமல்** : ரூ.13,000

**சியால்** : ரூ.15,000

(2) பங்காளர்கள் ஆண்டின் ஆரம்பத்திலுள்ள மூலதனக் கணக்கு மீதியில் ஆண்டிற்கு 10% மூலதன வட்டிக்கு உரித்துடையவராவர். நடைமுறைக் கணக்குகள் மீது வட்டி செலுத்தப் படுவதில்லை. புதிய பங்குடைமையும் இதே வட்டி விகிதத்தினைத் தொடரத் தீர்மானித்தது.

(3) சியால் ஓய்வு பெற்ற பின்னரும் ஏனைய பங்காளர்கள் தொடர்ந்தும் தமது மாதாந்த சம்பளங்களைப் பெற்று வந்தனர்.

(4) 2011 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அமல் தனது மாதாந்தச் சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புத் தொகையாக ஆண்டிற்கான நிகர இலாபத்தின் 2% இனைப் பெற உரித்துடையவராவார். இந்தத் தொகை நிதியாண்டின் இறுதி நாளில் அவரின் நடைமுறைக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்படும். இந்த ஊக்குவிப்புத் தொகையானது குறித்த ஊக்குவிப்புத் தொகையினை அறவீடு செய்த பின்னர் நிகர இலாப மீதியில் கணிப்பிடப்படும்.

(5) சியாலுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையில் ரூ.500,000, 2011 ஜனவரி மாதத்தில் செலுத்தப்பட வேண்டியதுடன் எஞ்சிய தொகை இரண்டு ஆண்டுகளின் பின்னர் செலுத்தப்படும். இந்தத் தொகை மீதான வட்டி காலாண்டிற்கு ஒரு தடவை ஆண்டிற்கு 10% இல் கணிக்கப்பட்டு ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் அவரின் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்படும்.

**ABC டிரேடர்ஸ்** 2011 மார்ச் 31 ஆம் திகதியில் பிரித்தறியப்பட்ட பரீட்சை மீதி கீழ்வருமாறு:

| | வரவு<br>**ரூ.'000** | செலவு<br>**ரூ.'000** |
|---|---|---|
| **மூலதனக் கணக்குகள்,** 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் | | |
| ***அமல்*** | - | 900 |
| ***பிமல்*** | - | 600 |
| ***சியால்*** | - | 200 |
| **நடைமுறைக் கணக்குகள்** 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் | | |
| ***அமல்*** | 45 | - |
| ***பிமல்*** | - | 383 |
| ***சியால்*** | - | 407 |
| **தொக்குகள்** 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் கிரயத்தில் | 320 | - |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 4,250 | 9,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) :** | | |
| காணியும் கட்டடமும் (காணிப்பெறுமதி ரூ.790,000) | 2,390 | - |
| மோட்டார் வாகனம் | 4,000 | - |
| **தேய்மான ஏற்பாடு** 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் : | | |
| கட்டடங்கள் | - | 725 |
| மோட்டார் வாகனம் | | 1,200 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 205 | 1,011 |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் | | 15 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 30 | |
| நிர்வாகச் செலவுகள் | 956 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 1,200 | |
| நிதிச் செலவுகள் | 452 | |
| ***சியாலுக்குப்*** பகுதிக் கொடுப்பனவு | 500 | |
| பங்காளர் எடுப்பனவுகள் - ***அமல்*** | 13 | |
| - ***பிமல்*** | 35 | |
| - ***சியால்*** | 45 | |
| | **14,441** | **14,441** |

***கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன.***

(1) 2011 மார்ச் 31 ஆம் திகதியில் தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டன.

| ***கிரயம்*** | ***நிகரத் தேறுகைப் பெறுமதி*** |
|---|---|
| ரூ. 425,000 | ரூ.384,000 |

(2) நேர்கோட்டு முறையினை உபயோகித்து தேய்மான ஏற்பாடு செய்யப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் வருடாந்தத் தேய்மான விகிதங்கள்:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | - | ஆண்டுக்கு 5% |
| மோட்டார் வாகனங்கள் | - | ஆண்டுக்கு 10% |

(3) ரூ.5,000 இனை அறவிட முடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யவும் நிலுவையிலுள்ள கடன்பட்டோர் மீதியில் 10% ஐயுறவுக்கடன் ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான பதிவுகளை 2011 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 2011 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான காலத்தில் மாத்திரம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

(4) 2010 டிசம்பர் 31 ஆம் திகதி பங்குடைமையின் நன்மதிப்பின் மொத்தப் பெறுமதி ரூ.600,000 ஆக மதிப்பிடப்பட்டது. நன்மதிப்புக் கணக்கு கணக்கேடுகளில் பேணப்படும்.

(5) 2011 மார்ச் 31 இல் செலுத்தப்பட வேண்டியிருந்த நிர்வாகச் செலவுகள் ரூ.52,000.

(6) வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி, வருமானமும் செலவுகளும் கால அடிப்படையில் பரம்பியிருக்கும்.

**கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக.**

(a) 2010 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதி மற்றும் 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாத காலப்பகுதி ஆகியவற்றிற்கு **ABC டிரேடர்ஸ்** இன் வியாபார இலாப நட்டப் பகிர்வுக் கணக்கினை நிரல் வடிவில் (10 புள்ளிகள்)

(b) 2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்குகளை நிரல் வடிவில் (04 புள்ளிகள்)

(c) 2011 மார்ச் 31 ஆம் திகதி பங்குடைமையின் ஐந்தொகையினை (08 புள்ளிகள்)

(மொத்தம் 22 புள்ளிகள்)

## பகுதி - C

இந்தப் பகுதியிலிருந்து ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

20 புள்ளிகள்

**04.** (A) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2011 ஜுன் மாதத்திற்காக வ/வ ப.்.ண்ணி பிரதர்ஸ் கம்பனியின் ஊழியர் சம்பளம் மற்றும் கூலி தொடர்புபட்டதாகும்.

| ஊழியர் இல. | ஊழியர் பெயர் | அடிப்படைச் சம்பளம் ரூ. | ஏனைய படிகள் ரூ. | மேலதிகநேர கொடுப்பனவு ரூ. |
|---|---|---|---|---|
| 0100 | **அமரபால** | 50,000 | 30,000 | - |
| 1020 | **பர்ணாந்து** | 30,000 | 22,000 | - |
| 2050 | **ஜயலத்** | 20,000 | 10,000 | 10,000 |
| 3011 | **மதுவந்தி** | 18,000 | - | 15,000 |

சம்பளம் மற்றும் கூலி தொடர்பான ஏனைய விபரங்கள் வருமாறு:

(1) பர்ணாந்து, ஜயலத் மற்றும் மதுவந்தி ஆகியோரின் 2011 ஜுன் மாதத்திற்கான உற்சவ முற்பணத் தவணைக் கட்டணங்கள் முறையே ரூ.2,000, ரூ.1,000 மற்றும் ரூ.1,000 அவர்களின் சம்பளம் மற்றும் கூலிகள் செலுத்தப்படும்போது அறவிடப்படும்.

(2) ஜயலத் மற்றும் மதுவந்தி பெற்ற வங்கிக் கடன்கள் தொடர்பில் அவர்களின் கடன் தவணைக் கட்டணங்களை சம்பளத்திலிருந்து கழித்து நேரடியாக வங்கிக்கு அனுப்புவதற்கு கம்பனி வங்கிக்கு உறுதியளித்துள்ளது. ஜயலத் மற்றும் மதுவந்தி ஆகியோரின் 2011 ஜுன் மாத கடன் தவணைக் கட்டணங்கள் முறையே ரூ.5,000 உம் ரூ.2,000 உம் ஆகும்.

(3) ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) தொழில் தருநர் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புக்கள் முறையே 12% உம் 8% உம் ஆகும். மேலதிக நேரக் கொடுப்பனவு ஊழியர் சேமலாப நிதிக் கணிப்பீட்டில் கணக்கிற் கொள்ளப்படுவதில்லை. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) பங்களிப்பு நியம வகிதத்திலாகும்.

(4) 2011 ஜூன் மாதத்திற்காக அமரபால மற்றும் பர்ணாந்து ஆகியோரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய உழகைக்கும்போது செலுத்தும் வரி (PAYE) முறையே ரூ.3,000 உம் ரூ.1,200 உம் ஆகும்.

(5) மாதம் ஒன்றிற்கான சம்பளம் மற்றும் கூலியினை அடுத்த மாத முதல் வாரத்தில் செலுத்துவது கம்பனியின் வழமையான நடைமுறையாகும்.

**கீழ்வருவனவற்றினைத் தயாரிக்குக.**

(a) 2011 ஜூன் மாதத்திற்கான கம்பனியின் சம்பளப் பட்டியல்

(b) சம்பளம் மற்றும் கூலிகள் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஊடாக பொதுப் பேரேட்டில் உள்ள உரிய கணக்குகளில் சம்பளப் பட்டியற் தகவல்களை பதிவனுப்புவதற்காக (Posting) பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக. (06 புள்ளிகள்)

(B) இகநி 18 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (மீளாக்கம் 2005) எனும் நியமத்திற்கு அமைவாக கீழ்வருவனவற்றினைப் பொருள் வரையறை செய்க.

(a) தேய்மானம்

(b) பயன்தரு ஆயுள்காலம் (Useful life) (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** (A) நிறுவனமொன்றின் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பிலும் இரண்டு (02) அகக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை (procedures) நிரற்படுத்துக.

(a) காசு விற்பனைகள்

(b) சம்பளங்களும் கூலிகளும்

(c) கொள்வனவுகள் (06 புள்ளிகள்)

(B) நிறுவனமொன்றின் அகக் கட்டுப்பாடு தொடர்பாக "கட்டுப்பாட்டுச் சூழல் - Control Environment" , "கட்டுப்பாட்டு விதிமுறைகள் - Control Procedures" என்பவற்றினால் கருதப்படுவது என்ன? (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**06.** (A) அகக் கணக்காய்வொன்றின் அத்தியாவசியமான மூலகங்கள் (essential elements) எவை? (05 புள்ளிகள்)

(B) அகக் கணக்காய்வு மற்றும் புறக் கணக்காய்வு ஆகியவற்றின் (05) பிரதான குணாம்சங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

- o0o -